# DIOCESAN CIRCULAR LETTERS

No. C-21/2025 07.10.2025

## உலக நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு
## 19.10.2025

**அன்பிற்கினிய இறைமக்களே!**

நேற்றும் இன்றும் என்றும் மாறாத நற்செய்தியாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் அன்பும் அருளும் உங்களோடு இருப்பதாக!

மேனாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இந்த ஆண்டின் நற்செய்தி அறிவிப்பு ஞாயிறுக்கான மையச் சிந்தனையாக "எதிர்நோக்கின் தூதுவர்களாக நற்செய்திப் பணியாளர்களாய்" என்பதைத் தந்திருக்கிறார். அச்சிந்தனை ஒளியில் நற்செய்தி அறிவிப்புப் பணியின் முதன்மையையும், தேவையையும் பற்றி அவர் கூறுவதை நான் சற்று உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகின்றேன்.

### எதிர்நோக்கின் நற்செய்தி அறிவிப்பு பணிக்குக் கிறிஸ்துவே மாதிரி

இந்த யூபிலி ஆண்டில் நாசரேத்து தொழுகைக் கூடத்தில் தூய ஆவியால் தூண்டப்பெற்று அருள்தரும் ஆண்டினை அறிவிக்க இறைத் தந்தையால் அனுப்பப்பட்ட கிறிஸ்துவில் நம் பார்வையைப் பதிய வைப்போம்.

இறைவன் ஒருவரே தம் எதிர்நோக்கு என நம்பி இருக்கின்ற ஒவ்வொருவருக்கும் கிறிஸ்துவே மீட்பின் நிறைவாக இருக்கின்றார். அவரே இழப்புகள், நெருக்கடிகள், போராட்டங்கள் நடுவிலும் ஆண்டவரின் அருள்தரும் ஆண்டிலே சிறைப்பட்டோருக்கும், பார்வையற்றோருக்கும், நோயுற்றோருக்கும் நலம் நல்கி, சென்ற இடமெல்லாம் நன்மை செய்து கொண்டே சென்றார். தேவையில் உழன்ற அனைவருக்கும் அவர்கள் இறைவனில் கொண்டிருந்த எதிர்நோக்கை மீட்டு தந்தார். கிறிஸ்துவின் இப்பணியை திறம்பட செய்யும் நமக்கு அவரே முன்மாதிரியாகத் திகழ்கின்றார்.

### எதிர்நோக்கின் திருஅவை இயங்கும் திருஅவையே

எதிர்நோக்கின் இறைத் தூதுவரான இயேசு கிறிஸ்து தமது மறைமுக உடனிருப்பால் நற்செய்தி அறிவிக்கும் சீடர்கள்

ஒவ்வொருவரோடும் இணைந்து பயணித்துக் கொண்டே இருக்கிறார். விடுதலை அளிக்கும் நலப்படுத்தும் பணியைச் செய்யும் திருஅவையும் கிறிஸ்துவின் அன்பினால் தூண்டப்பெற்று மிகுந்த ஆர்வத்துடன் இப்பணியைத் தொடர்ந்து செய்து வருகிறது. இவ்வாறு எதிர்நோக்கின் திருப்பயணத்தில் உண்மை நிலையை உணர்ந்து, நகர்வற்ற நிலையைக் களைந்து, சவால்களின் நடுவிலும் மீட்பிற்காக எதிர்நோக்கோடு காத்திருக்கும் நலிவுற்ற ஒவ்வொருவரின் குரலுக்கும் செவிமடுக்கும் திருஅவையே கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் பயணிக்கும் திருஅவை.

## எதிர்நோக்கை கட்டி எழுப்புபவர்கள் கிறிஸ்தவர்களே

கிறிஸ்துவைப் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் தாங்கள் வாழும் சூழலில் எதிர்நோக்கின் நற்செய்தியைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளவும் அந்த எதிர்நோக்கு எட்டாத தொலைவில் அல்லாமல் அனைவரும் பங்கேற்கும் வகையில் அதன் விசாலமானக் கதவுகளைத் திறந்துவைக்கவும் வேண்டும்.

இன்றைய உலகில் முன்னேறிய பல நாடுகளில் சமூக அவலங்களாகிய தனிமை, குழப்ப உணர்வு, முதியோரை கண்டுகொள்ளாமை, அடுத்திருப்போருக்கு உதவுவதில் தயக்கம் போன்றவை மலிந்து காணப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் கிறிஸ்தவக் குழுமங்களாகிய நாமோ எதிர்நோக்கினால் உந்தப்பட்டு புதிய மானுடத்தை உருவாக்குவதில் முன்னோடிகளாக திகழ வேண்டும்.

வளர்ந்த நாடுகளில் நெருக்கமான உறவு நிலை மறைந்து வரும் நிலையில் நாமோ ஒருவரோடு ஒருவர் தொடர்பில் இருக்கிறோம். ஆனாலும் உறவில் இல்லை. பொருட்கள்மீது நமக்குள்ள பற்றும் பேராசையும் பிறர் நலனில் அக்கறையற்ற சுயநலவாதிகளாக நம்மை மாற்றிவிடுகிறது. எனினும் குழும வாழ்வில் நாம் பெறும் இறை அனுபவம் நலமான மனிதப் பண்பை மீட்டெடுக்கும் எதிர்நோக்கை தருகிறது.

திருத்தந்தை பிரான்சிஸ் யூபிலி பற்றிய ‘எதிர்நோக்கு ஏமாற்றம் தராது’ எனும் அதிகாரப்பூர்வமான ஆணைமடலில் குறிப்பிடுவதுபோல போர்களால் பாதிக்கப்பட்டோர், குடும்பங்கள், சிறைவாசிகள், நோயாளர், இளைஞர், புலம் பெயர்ந்தோர், முதியோர், ஏழையர் ஆகியோரை சிறப்புக் கவனம் செலுத்தி, தனிநபர்களின் உறவு வழியாக இறைவனின் பேரன்பை அவர்களில் கொண்டு சேர்த்துச் இரக்கமே நிறைந்த இயேசுவின் இதயத்துடன் இவ்வுலகம் முழுவதும் இணைந்திட நம் நற்செய்தி அறிவிப்புப் பணி உதவ வேண்டும்.

## எதிர்நோக்கின் திருப்பணி இறைவேண்டலிலே நிறைவு பெறும்

எதிர்நோக்கின் நற்செய்தி அறிவிப்பின் அவசரநிலையைக் கிறிஸ்துவின் சீடர்களாகிய நாம் உணர்ந்திருக்கின்றோம். எனவே அதனை முனைப்போடு செயல்படுத்த குறிப்பாக இழந்துபோன ஆடுகளை மீட்டெடுக்க ஒவ்வொரு திருப்பலிக் கொண்டாட்டத்தையும் உயிர்ப்பின் அனுபவமாக நாம் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

உயிர்த்து மாட்சி அடைந்த கிறிஸ்துவே நமது எதிர்நோக்கின் ஊற்று. அவரோடு இறைவேண்டலில் ஊன்றியிருப்போரே எதிர்நோக்கின் பணியாளர்கள். ஆகவே நமது இறைவேண்டல் நற்செய்திப் பணியின் முக்கியச் செயல்பாடாக அமையட்டும். இவ்வாறு இறைவேண்டலின் வழி இறைவன் நமக்குள் ஏற்றி வைத்திருக்கும் எதிர்நோக்கின் சுடரைப் பற்றி எரியச் செய்வோம். இந்தச் சுடர் நெருப்பாக மாறி நம்மைச் சூழ்ந்து வாழும் அனைவரிலும் படர்ந்து அவர்களையும் ஒளிரச் செய்யும். இந்தப் பணியை தனிநபராக மட்டுமல்லாமல் குழுமமாக இணைந்து ஆற்றுவது இன்றியமையாதது.

நமது மறைமாவட்டத்தின் திருத்தூதுக் கழகங்களோடும், அருள்பணிக் குழுக்களோடும் இணைந்து சிறார், இளைஞர், முதியோர் என பல்வேறு நிலையினரும் தங்களின் சாட்சிய வாழ்வு, தியாகம், தாராள மனநிலை வழியாக நற்செய்திப் பணிக்கு அளித்து வரும் அனைத்து உதவிகளுக்காகவும் உளமார நான் நன்றி கூறுகின்றேன்.

குறிப்பாக நமது மறைமாவட்ட நற்செய்தி அறிவிப்புப் பணிக்குழு இந்த எதிர்நோக்கை கண்முன் கொண்டு குழும உணர்வுடன் திருஅவையிலும் சமூகத்திலும் நலிந்த நிலையில் இருப்போருக்குக் கிறிஸ்துவின்மீதுள்ள எதிர்நோக்கை ஆழப்படுத்தும் வகையில் பணித்திட்டங்களை வகுத்து முனைப்போடு செயல்படுத்தி வருவது போற்றுதற்குரியது.

இன்றைய காலக்கட்டத்தில் சிறப்பு கரிசனைக்குரியவராக கருதப்படும் ஆதரவற்ற சிறார், இளைஞர், முதியோர், மாற்றுத்திறனாளிகள், மனநலம் குன்றியோர், பால்புதுமையினர் என அனைவரும் இறைவனின் தனிப்பெரும் கருணையை அனுபவமாக்க வழிவகைச் செய்வதும் பாராட்டுக்குரியது.

நோன்பு செபம், இரவு விழிப்பு செபம், உள்ளிருப்புத் தியானம், பயிற்சிகள், நற்செய்தி கொண்டாட்டம், பிறரன்பு பணிகள் என பல நிலைகளில் அனைவரும் ஒன்றிணைந்து, பங்கெடுத்து தூய

ஆவியாரின் ஆற்றலைப் பெற உதவி வருவதும் சிறப்பானது. இவ்வனைத்துச் செயல் திட்டங்களும் மென்மேலும் வளம்பெற்றிட இதில் ஈடுபட்டு உழைக்கின்றவர் களையும் உதவுகின்றவர்களையும் உளமாரப் பாராட்டுகின்றேன்; அவர்களுக்காக இறைவேண்டல் செய்கின்றேன்.

நிறைவாக, இந்த ஒருங்கிணைந்த நற்செய்தி அறிவிப்புப் பணிகளின் செயல்பாடுகள் அனைத்தையும் விடியற்காலை விண்மீனாக எதிர்நோக்கில் ஊன்றி நின்ற இயேசுவின் தாயும் நமது தாயுமாகிய அன்னைமரியாவிடம் ஒப்படைப்போம். இந்த யூபிலி ஆண்டின் செயல் திட்டங்களும் அதன் அடிப்படையிலான நற்செய்தி அறிவிப்புப் பணியும் சிறப்பாக நடைபெற அன்னையின் பரிந்துரையை நாடுவோம்.

கிறிஸ்தவ எதிர்நோக்கின் ஒளி உங்கள் ஒவ்வொருவரின் உள்ளங்களையும் ஒளிர்விப்பதாக! “அறிவெல்லாம் கடந்த இறை அமைதி” (பிலி 4:7) உங்கள் உள்ளங்களில் தங்குவதாக!

***கிறிஸ்துவின் மனநிலையில்,***

Sd/-

**ஆயர் நசரேன் சூசை**

கோட்டாறு மறைமாவட்டம்

---

**குறிப்பு :** இந்தச் சுற்றுமடல் நமது மறைமாவட்டத்தின் அனைத்து ஆலயங்களிலும் நிறுவனங்களிலும் 12.10.2025 அன்று ஞாயிறு திருப்பலியில் வாசிக்கப்பட வேண்டும்.

---